- இந்த கருத்து கேட்புக் கூட்டம் நடக்கவுள்ளது சம்பந்தமாக 14.01.2026 அன்று 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' மற்றும் 'தினமலர் ஆகிய நாளிதழ்களில் விளம்பரம் கொடுக்கப்பட்டுள்ளது.
- முதலில் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர் அவர்கள், இந்த திட்டத்தை பற்றி உங்களுக்கு எடுத்துக் கூறுவார்கள். அதன் பின் பொதுமக்கள் அவர்களுடைய கருத்துக்களை பதிவு செய்யலாம்.

- ❖ இந்த கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு வீடியோ மற்றும் ஆடியோ வடிவிலும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும்.
- ❖ எனவே, பொதுமக்கள் அனைவரும் அவர்களுடைய கருத்துக்களை பதிவு செய்யலாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.
- ❖ முதலில் திட்ட ஆலோசகர் அவர்கள் இந்த திட்டத்தை பற்றி சுருக்கமாக விளக்குவார்கள்.

## திரு.ஷேக், சுற்றுச்சூழல் ஆலோசகர், ஜியோ எக்ஸ்புளோரேசன் அண்டு மைனிங் சொல்யூஷன்ஸ், சேலம்

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டறிக்கை பற்றி திரு.ஷேக், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர், ஜியோ எக்ஸ்ப்லொரேஷன் & மைனிங் சொல்யூஷன்ஸ்,சேலம் மாவட்டம் அவர்கள் நிழல்படம் மூலம், செயலாக்கப்படவுள்ள இத்திட்டத்தின் சுற்றுச் சூழல் தாக்கங்கள், அவற்றைத் தவிர்க்க தேவையான நடவடிக்கைகள், அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை மற்றும் இத்திட்டத்தின் மூலம் பெறப்படவுள்ள நன்மைகள் குறித்துவிரிவாக எடுத்துரைத்தார்.

**திட்ட உரிமையாளர் :**

நான் சரண்யா ஞானசேகரன். ஸ்ரீ ப்ளூ மெட்டல் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக நடத்திக் கொண்டு இருக்கிறோம். எல்லா அரசு விதிமுறைகளையும் பின்பற்றுகிறோம். வெடி வெடிப்பதற்கு தற்போதுள்ள நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி சரியான நேரங்களில் அரசு விதிமுறைகளின்படி மைனிங்மேட், போர்மேன் எல்லோரையும் பணியமர்த்தி குவாரி நடத்திக் கொண்டு இருக்கிறோம். அதுபோல் பசுமை அரண், குவாரியை சுற்றி மரங்கள் நட்டு, தண்ணீர் விட்டு பாதுகாத்து வருகிறோம். மேலும் குவாரியை சுற்றி 5-7 வண்டிகள் மூலம் 8 முறை குவாரியைச் சுற்றி தண்ணீர் தெளித்து தூசி பறக்காமல், மாசுபடாமல் பார்த்துக் கொள்கிறோம். அரசு விதிமுறைகள் அவ்வப்போது என்ன வருகிறதோ அதையெல்லாம் பின்பற்றி வருகிறோம்.

200 முதல் 300 குடும்பங்களுக்கு மேல் வேலைவாய்ப்பு கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். இனி மேலும் அரசு விதிமுறைப்படி தான் செய்வோம். அது போக எங்கள் கிராமத்தில் இருக்கிற எல்லாருக்கும் நல்லபடியாக M சேன்டு மற்றும் மற்ற பொருட்கள் குறைந்த விலையிலும் வண்டிவாடகை இல்லாமலும் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். அருகிலுள்ள பள்ளிகளை பராமரித்துக் கொண்டு எங்கள் கிராமத்தையும் நல்லபடியாக வைத்துக்கொண்டு இருக்கிறோம். கிட்டத்தட்ட 20 ஆண்டுகளாக அப்பா குவாரி பண்ணிக் கொண்டு இருக்கிறார், நாங்களும் தொடர்ந்து பண்ணுவோம். அதற்க்கு நீங்கள் எப்போதும் எங்களுடன் இருக்க வேண்டும். நன்றி.

1. திரு. M.ஜெகநாதன், சிக்காரம்பாளையம் , முன்னாள் ஊராட்சி மன்ற துணை தலைவர்

என் பெயர் M. ஜெகநாதன், நான் முன்னாள் ஊராட்சி மன்ற துணை தலைவர், சிக்காரம்பாளையம் ஊராட்சி. ஸ்ரீ ப்ளூ மெட்டல் நிர்வாகத்தில் அவர்களுக்கு உரிமம் வழங்குவதால் எங்கள் பஞ்சாயத்தை சுற்றி உள்ள அனைவருக்கும் இலவச தொகுப்பு வீடுகள் வரும் பொழுது அனைவருக்கும் M சேண்டு, ஜல்லி இலவசமாக கொடுத்து கொண்டு இருக்கிறார்கள். அதுபோக இங்கு வரும் ஒப்பந்ததாரர்களுக்கும் குறைந்த விலையில் நிறைவாக அனுப்புகிறார்கள். அவர்களுக்கு உரிமம் வழங்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

2. திரு. செ.பன்னீர் செல்வன், சிக்காரம்பாளையம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்

என் பெயர் செ. பன்னீர்செல்வன். சிக்காரப்பாளையம் கிராமத்திற்கு உட்பட்டவன். நான் முன்னாள் ஊராட்சி மன்ற உறுப்பினராகவும், நமது கோவை மாவட்டத்தின் ஆதிதிராவிடர் நலக் குழு உறுப்பினராகவும் இருந்து பணியாற்றி உள்ளேன். குறிப்பாக எங்களது சிக்காரப்பாளையம் ஊராட்சியில் ஸ்ரீ ப்ளூ மெட்டல் உரிமையாளர் அருமை அண்ணன் ஞானசேகரன் அவர்களைப் பற்றியும், அவர்களின் குடும்பத்தார் பற்றியும் இந்த ஊராட்சியில் உள்ள அனைவருக்கும் நன்கு தெரிந்த ஒரு விஷயம்.

குறிப்பாக நமது சகோதரி சரண்யா அவர்கள் சொன்னபடி, 20 ஆண்டுகளுக்கு மேலாக இந்த கல் குவாரியை அண்ணன் ஞானசேகரன் அவர்கள் நிர்வாகம் செய்து வருவதை நான் கண்கூடாக அறிவேன். குறிப்பாக நான் நேரடியாக அந்த கல் குவாரிக்கு சென்று, அந்த கல் குவாரி எப்படிப்பட்ட தோற்றத்தை உருவாக்கியது, அங்கு என்ன ரசாயன கழிவுகள் கலக்கப்படுகிறதா அல்லது அந்த தோட்டத்தின் நிலை என்ன, குறிப்பாக ஒவ்வொரு பாதைக்கும் எந்த மாதிரி வழி செல்கிறது, குறிப்பாக மாசு தொடர்பாக மக்கள் பிரச்சனை ஏதாவது உண்டா, இது தொடர்பாக எந்த இடையூறுகள் இருக்கிறது என்று 20 ஆண்டுகளுக்கு முன்பே நான் அதை சோதனை செய்தேன்.

அப்போது நேரடியாக அண்ணன் அவர்கள் அழைத்து சென்று, "நீ எல்லா இடத்தையும் சுற்றி பார்த்துவிட்டு வா" என்று எனக்கு அனுமதி கொடுத்து, நான் அந்த கல் குவாரி முழுவதுமே சுற்றி பார்த்துவிட்டு வந்தேன். ஆனால் அருமை அண்ணன் ஞானசேகரன் அவர்கள் மிகச் சிறப்பான ஒரு பணியை அங்கே செய்து இருந்தார். எந்த ஒரு தூசி கூட வெளியே போகாதவாறு

மரங்களை நட்டு தடுத்து விட்டார். அந்த மாதிரி திறமையான நிர்வாகம் படைத்தவர் அண்ணன் ஞானசேகரன் அவர்கள்.

அவர் தொடர்ந்து 20 ஆண்டுகள் இந்த கல் குவாரியை நிர்வாகம் செய்து வருவதை சிறப்பாக நாங்கள் எல்லோரும் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அது மட்டுமல்லாமல் எங்கள் பகுதியில் உள்ள மக்களுக்கு ஒரு லோடு கல் இல்லை, ஒரு லோடு மண் இல்லை என்றால் இலவசமாகவே அவரே கொண்டு சென்று கொட்டி விட்டு வந்து விடுவார். அப்படிப்பட்ட சமூக மனப்பான்மை உள்ளவர்.

அது மட்டுமல்ல, இந்த பஞ்சாயத்தில் இருக்கிற ஏழை, எளிய பெண்களுக்கு எந்த நேரத்தில் போய் உதவி கேட்டாலும் உதவி செய்கிற ஒரு நல்ல மனிதர். அதே போல பள்ளி மாணவ மாணவிகள் அவர்கள் கல்வி கற்று மேலும் மேலும் வாழ்க்கையில் வர வேண்டும் என்பதற்காக ஒரு நல்ல பண்போடு இந்த ஊராட்சி மட்டுமன்றி சுற்றிலும் உள்ள பொதுமக்களும் கல்வி கற்பதற்கு ஏற்பாடு செய்து உதவி செய்வார். அதை நான் கண்முன் அண்ணனுடன் நேரடியாக போய் பார்த்து இருக்கிறேன். அது மட்டுமல்ல, அங்கு இருக்கும் மக்கள் சொல்வதையும் நான் கேட்டு இருக்கிறேன்.

அப்படிப்பட்ட மரியாதைக்குரிய ஞானசேகரன் அவர்கள் இந்த ஊராட்சியில் இந்த கல் குவாரியை நடத்தி வருவது நாங்கள் தெரிந்த விஷயம். ஆக மீண்டும் மீண்டும் இந்த நிர்வாகம் தொடர்ந்து இந்த கல் குவாரி நடத்திட பொதுமக்கள் சார்பாக எந்த ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்துக் கொண்டு, எனக்கு வாய்ப்பு அளித்த மரியாதைக்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், மற்றும் சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

3. <u>சதீஷ், தன்னார்வலர்</u>

என் பெயர் சதீஷ், நான் ஒரு சூழியல் காப்பாற்று செயலாளராக உள்ளேன். இந்த சபைக்கு வணக்கம். மேடைக்கு வந்த அன்பருக்கும் வணக்கம். உங்கள் ஆச்சார விவரங்களை, கலாச்சாரம், சம்பிரதாயங்களை காப்பாற்றிக் கொண்டு உங்கள் மனோபாவங்களை மதிக்கிறேன்.

உங்கள் அபிப்ராயங்களுடன் நியாயமான பிரச்சனைகளை ஒப்புக்கொண்டு உங்களுடன் ஒருமனதாக ஒப்புக்கொள்கிறேன்.

உங்கள் பிரச்சனைகளை உடனடியாக தீர்த்து வைக்கும்படி அரசாங்கம் இந்த ஊரினை எடுத்துக்கொண்டு நிலையான வளர்ச்சி உருவாக்குவதற்கு அதிகமான நிதியை உடனே வெளியிட வேண்டும். புதிய யுகம் வேலைவாய்ப்பினை உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும். அருகில் உள்ளவர்களுக்கு நிரந்தர வீடுகள் கொடுக்க வேண்டும் என்று அரசாங்க உயர்நிலை அதிகாரிகளுக்கு மிகுந்த தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஊர் சூழியல் மற்றும் பசுமையுடன் இருக்க வேண்டும் என்று சூழியல் காப்பாற்று செயலாளராக கூறுகின்றேன். இந்த உரிமையாளர் அவர்களுக்கு மரங்களை வளர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மரங்கள் வளருங்கள், அவற்றை காப்பாற்றுங்கள்.

இந்த உரிமையாளர் அவர்களுக்கு எவ்வித கட்டுப்பாட்டையும் விதிக்காமல் அனுமதியை உடனடியாக கொடுக்க வேண்டும் என்று அரசாங்க உயர்நிலை அதிகாரிகளையும் மிகுந்த தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

4. <u>திரு. K.முருகன், சிக்காரம்பாளையம் , சிக்காரம்பாளையம்</u>

அனைவருக்கும் வணக்கம், எனது பெயர் K. முருகன். நான் சிக்காரம்பாளையம் கிராமத்தில் பூர்வீகமாக வசித்து வருகிறேன். நான் கடந்த 1986 முதல் 1991ம் ஆண்டு வரை ஊராட்சி மன்றத்தில் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக செயலாற்றி வந்துள்ளேன். எனக்கு தற்போது 67 வயது ஆகிறது.

1980ம் ஆண்டு முதல் நமது சிக்காரம்பாளையம் ஊராட்சியில் கல் குவாரிகள் நடந்து வருவதை நன்கு அறிவேன். தற்போது ஸ்ரீ ப்ளூ மெட்டல் நிறுவனத்தார் 20 ஆண்டுகளாக நமது சிக்காரம்பாளையம் ஊராட்சியில் இந்த தொழிலை நடத்தி வருகிறார்கள்.

இவர்கள் கல்விக்காக அதிகப்படியான முக்கியத்துவம் கொடுத்து பள்ளி மாணவர்களுக்கு செய்கின்ற உதவிகளையும், பள்ளி படிப்பை உயர்த்துவதற்கும் பள்ளியின் வருகைப் பதிவேட்டை அதிகரிப்பதற்குண்டான பணிகளை தொடர்ந்து செய்து கொண்டு இருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல் இவர் சிக்காரம்பாளையம் ஊராட்சி மன்ற தலைவராக இருந்த காலத்திலேயே நமது சுற்றுப்புறத்தில் இருக்கக்கூடிய கல் குவாரி மற்றும் நிறுவன உரிமையாளர்களை ஒருங்கிணைத்து, அரசின் "நமக்கு நாமே" திட்டம், "கிராம தன்னிறைவு" திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் தனி குடிநீர் திட்டத்தை செயல்படுத்தி கிராம மக்களின் குடிநீர் பிரச்சனையை போக்கி உள்ளார்கள்.

நமது அரசு பள்ளிகள் பழுதடைந்த பள்ளிகளை "நமக்கு நாமே" திட்டத்தின் மூலம் பொதுமக்கள் பங்களிப்புடன் தனியார் பள்ளிகளுக்கு நிகராக தரை மற்றும் முதல் தளம் கொண்ட கட்டிடங்களை அமைத்து, பள்ளி மாணவர்கள் வருகையை அதிகப்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகிறார்கள்.

ஆகவே இந்த ஸ்ரீ ப்ளூ மெட்டல் நிறுவனத்தார்கள் இன்று நடைபெறுகின்ற இந்த கருத்து கேட்பு கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற நல்ல உள்ளம் படைத்தவர்கள் எங்கள் சிக்காரம்பாளையம் கிராமத்தில் தொழில்கள் நடத்துவதால் கிராம வளர்ச்சிக்கு முக்கிய உதவியாக இருக்கும் என்பதைக் கேட்டுக் கொண்டு, எனக்கு வாய்ப்பு அளித்த அனைவருக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன்.

5. <u>திரு. விஜய பிரபு, பெள்ளாதி , கோவை மாவட்டம்</u>

என் பெயர் விஜயபிரபு. அனைவருக்கும் இனிய காலை வணக்கம். பெள்ளாதி கிராமத்தில் கிரஷர் பக்கத்தில் என் இடம் இருக்கிறது. இவர்களின் கிரஷர் தொழில் மூலம் இந்த சுற்றுவட்டாரத்தில் பெரிய பாதிப்புகள் எதுவும் ஏற்படுவதில்லை. சுற்றுச்சூழலை கருத்தில் கொண்டு அதற்கு தேவையான நடவடிக்கைகள் 100 சதவீதம் எடுத்திருக்கிறார்கள்.

நான் ரோட்டரி சங்கத் தலைவராக இருந்திருக்கிறேன். இப்போது கடந்த 5 ஆண்டுகளாக ரோட்டரி சங்கத்தின் மூலம் பல்வேறு நலத்திட்டங்களை எல்லா இடத்திலும் செய்து கொண்டு இருக்கிறார்கள். மேலும் குழந்தைகளின் கல்வி மற்றும் சுற்றுவட்டாரம், அதாவது காரமடை, மேட்டுப்பாளையம் தொகுதி ஆகிய அனைத்து பகுதிகளுக்கும் தேவையான உதவிகளை செய்து கொண்டு உள்ளார்.

ஆதலால் அவர்கள் தொழில் நடத்த எங்களுக்கு தடை ஏதும் இல்லை என்பதை தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

6. திரு.பூபதி என்கின்ற குமரேசன், பெள்ளாதி, கோவை மாவட்டம்

நான் பெள்ளாதி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர். நான் தொடர்ந்து மூன்று முறை மன்றத் தலைவராக இருந்திருக்கிறேன். இந்த ஸ்ரீ ப்ளூ மெட்டல்ஸ் நிறுவனம் கடந்த 25-30 ஆண்டுகளாக கல் குவாரி நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். பொதுமக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

இந்த நிறுவனம் கல் குவாரி நடைபெறுகிற போது யாருக்கும் இடையூறு இல்லாமல் பணி நடைபெறுகிறது. இந்த நிறுவனம் கல் குவாரி பணி நடைபெறுகிற போது தூசி வெளியேறாமல் இருக்க கல் குவாரி சுற்றியும் நிறைய மரங்கள் நடப்பட்டுள்ளது. வெடி வைக்கும் போது அதிர்வு ஏற்படாத வகையில் புதிய தொழில்நுட்பத்துடன் நானெல் வெடி பொருட்களை பயன்படுத்துகிறார்கள். அதனால் அதிர்வு ஏற்படுவதில்லை.

நமது ஊராட்சியில் கடந்த 2 ஆண்டுகளாக அரசாங்கத்தால் கட்டிக் கொடுக்கப்படும் 100 இலவச வீடுகளுக்கு M சேண்டு, ஜல்லி ஆகிய கட்டுமான பொருட்களை குறைந்த விலையில், அதுவும் இலவசமாக டெலிவரி செய்து கொண்டு இருக்கிறார்கள் இந்த நிறுவனத்தின் உரிமையாளர்.

நமது பெள்ளாதி ஊராட்சியில் ஏழு எருமை பள்ளத்தின் குறுக்கே புதியதாக தடுப்பணை கட்ட இலவசமாக M சேண்டு, ஜல்லி, கற்கல் வழங்கினார்கள். கல் குவாரிகள் மூலம் ஊராட்சிக்கு வரும் நிதியின் மூலம் ஊராட்சியில் சாலை வசதி, வடிகால் வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி, இரண்டு சமுதாய கூடங்கள்கூட பெள்ளாதி ஊராட்சியில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த கல்குவாரிகளின் மூலம் பொதுமக்களின் வேண்டுகோளை ஏற்று தற்போது ஸ்ரீ ப்ளூ மெட்டல், சரவணா ப்ளூ மெட்டல், V.K.V ப்ளூ மெட்டல், சாம்ராஜ் கன்ஸ்ட்ரக்ஷன், வெங்கடேஸ்வரா ப்ளூ மெட்டல், நிர்மலா ப்ளூ மெட்டல் ஆகிய நிறுவனங்களின் உரிமையாளர்கள் சார்பாக சுமார் 80 லட்சம் மதிப்பீட்டில் பெள்ளாதி ஏழு எருமை பள்ளத்தில் உள்ள தடுப்பணையிலிருந்து கிழக்கே சுமார் 2 கி.மீ. தொலைவில் உள்ள மொங்கம்பாளையம் மூங்கில்குட்டைக்கு அரசு அனுமதி பெற்று சோலார் மின் மோட்டார் அமைத்து, குழாய் மூலம் நீர்

ஏற்றம் செய்து, மழைநீர் சேகரிப்பு செய்து நிலத்தடி நீர் மட்டம் உயர்த்துவதற்காக இந்த நிறுவனங்கள் உட்பட 4-5 நிறுவனங்கள் மூலம் பணிகள் நடைபெற்று கொண்டு இருக்கிறது.

பொதுமக்களும் விவசாயிகளும், விவசாய கூலி தொழிலாளர்களும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். இந்த ஸ்ரீ ப்ளூ மெட்டல் நிறுவனத்திற்கு கல் குவாரி அமைக்க அனுமதி வழங்கலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் கல் குவாரி உரிமையாளர்கள் பொதுமக்களுக்கு படிப்பு செலவு, மருத்துவ செலவு, ஊர் பொதுமக்கள் காரியங்கள் மற்றும் சுப, துக்க நிகழ்ச்சிகளுக்கு உதவி செய்து கொண்டு இருக்கிறார்கள்.

எனவே இந்த நிறுவனத்திற்கு கல் குவாரி அமைக்க அனுமதி வழங்கலாம் என்பதை முன்னாள் ஊராட்சி மன்றத்தின் சார்பாக உங்களை எல்லாம் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

7. <u>திரு. சண்முகம், தன்னார்வலர், சிக்காரம்பாளையம்</u> :

அனைவருக்கும் வணக்கம். என் பெயர் சண்முகம். சமூக ஆர்வலர், சிக்காரம்பாளையம்.

இந்த கல் குவாரி அருகிலுள்ள கிராமம் நம்ம சிக்காரம்பாளையம். எனக்கு கிட்டத்தட்ட 48 வயது ஆகிறது. சிறிய வயதிலிருந்தே பார்த்தால் கல் குவாரிகள் அந்த பகுதியில் இருக்கிறது. தலைவர் ஊராட்சி தலைவராக இருக்கும் போது ஊராட்சியில் வெறும் 26,000 ரூபாய் இருந்தது. கனிம மற்றும் சுரங்க நிதியிலிருந்து நிறைய பணிகள் – சாலை பணிகள், கழிவுநீர் வடிகால் மற்றும் பள்ளிக்கூடங்கள் – செய்யப்பட்டன.

தற்சமயம் ஒரு ஆண்டுக்கு முன்பு சிக்காரம்பாளையத்தில் 70 வருட கட்டிடம் மிகவும் பழுதடைந்து விட்டது. அதை தலைவரிடம் சொன்னோம். அதை "நமக்கு நாமே" திட்டத்தின் மூலமாக அங்குள்ள கல்குவாரி சங்கத்தின் மூலம் பள்ளிக்கு கட்டிடம் தரைத்தளம் மற்றும் மேல்தளம் அமைத்து, தனியார் பள்ளிகளுக்கு இணையாக சிக்காரம்பாளையம் பள்ளியின் தரம் உயர்த்தி சிறப்பாக செயல்பட்டு கொண்டு இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், தலைவர் ஒவ்வொரு ஆண்டும் குழந்தைகளுக்கு — சிக்காரம்பாளையம் ஊராட்சி மட்டுமல்லாமல் மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதியிலுள்ள பள்ளி குழந்தைகளுக்கும் — ஆண்டுதோறும் பள்ளி சீருடைகள், காலணிகள், பள்ளி குழந்தைகளுக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் குழந்தைகளின் கல்விக்காக என்றால் எந்த நேரத்திலும் உடனே வந்து அவர்களுக்கு உதவி செய்து கொண்டு இருக்கிறார்.

அது மட்டுமில்லாமல் கல் குவாரியை சுற்றி உள்ள 500 குடும்பங்கள் இந்த தொழிலைத்தான் நம்பி இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு முக்கியமாக இருக்கிறது. அதுமட்டுமில்லாமல் கல் குவாரியை சுற்றிலும் மற்றும் அருகில் உள்ள கிராமங்களில் 10க்கும் மேற்பட்ட இடங்களில் மியாவாகி நட்டு சிறப்பாக செய்து கொண்டு இருக்கிறார். நான் அந்த வழியாகத்தான் வழக்கமாக சென்று வருவேன்.

சரண்யா அவர்கள் சொன்னது 100க்கு 100 உண்மை. காலை, மாலை என வண்டி வைத்து தண்ணீர் தெளித்து கொண்டு இருக்கிறார்கள். யார் வேண்டுமானாலும் போய் பார்க்கலாம்.

இந்த நிறுவனம் இருந்தால் மைன்ஸ் மற்றும் மினரல்ஸ் நிதி 24 ஆயிரம் கோடி வருமானம் என்று சொல்லி இருக்கிறார்கள். இப்போது இருப்பதை விட இன்னும் 3 மடங்கு நமது ஊராட்சி இன்னும் சிறப்பாக இருக்கப் போகிறது.

அதனால் இந்த கல் குவாரி வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

8. <u>திரு. கார்த்திக் , பேராசிரியர்</u>

அனைவருக்கும் எனது இனிய காலை வணக்கம். என் பெயர் கார்த்திக்.

நான் +2 முடித்த பிறகு என்ன செய்வது என்று தெரியாமல் இருந்தேன். தலைவரை பார்த்து பேசிய போது, கல்லூரி படிக்க எனக்கு பணம் கொடுத்து கல்லூரிக்கு அனுப்பினார். கல்லூரியில் 5 டிகிரி முடித்து, தற்போது கல்லூரியில் பேராசிரியராக இருக்கிறேன்.

என்னைப் போலவே நானும் நிறைய பேருக்கு அப்ளிகேஷன் போட்டு கல்லூரியில் சேர்த்துவிட்டிருக்கிறேன். பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் உதவித்தொகை கொடுத்து அவர்களின் கல்வியை ஊக்குவிக்கிறார். நிறைய பேர் +2 முடித்து

கல்லூரிக்கு போக முடியவில்லை என்று சொல்லும் எல்லோரையும் கல்லூரியில் சேர்த்து படிக்க வைத்துக் கொண்டிருக்கிறார்.

அது மட்டுமில்லாமல் பள்ளி குழந்தைகளுக்கு 22 வருடமாக ஒவ்வொரு ஆண்டும் 2000 பள்ளி குழந்தைகளுக்கு இலவச சீருடை மற்றும் காலணி கொடுத்து, தனியார் பள்ளி போலவே நடத்திக் கொண்டு வருகிறார்.

அது மட்டுமில்லாமல் 10ம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் அனைவரையும் விமானத்தில் கல்விச் சுற்றுலா அனுப்பி வைத்து, அவர்களின் கல்வி மேம்பட செய்கிறார்கள்.

ஊர் பொதுமக்களுக்கும் குடிநீர், சாலை மற்றும் அனைத்து வசதிகளும் செய்து, பழுதடைந்த அனைத்து தொகுப்பு வீடுகளையும் பழுது பார்த்து, வண்ணம் பூசி சரி செய்து கொடுத்துள்ளார்கள்.

இதுபோல் மக்களுக்கு நிறைய விஷயங்கள் செய்து இருக்கிறார்கள். பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கு ஒவ்வொரு மாதமும் 2 முறை (1ம் தேதி, 15ம் தேதி) ஊட்டச்சத்து பொருட்கள் கொடுத்து, அவர்களுக்கு எந்த வித நோயும் இல்லாமல் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று அவர்களின் நலனை பாதுகாத்து வருகிறார்கள்.

இது போன்று மக்களுக்கு நல்ல உதவிகள் மட்டும் செய்வதல்லாமல், கல் குவாரி சுற்றுச்சூழலுக்கு எந்த வித இடையூறும் இல்லாமல் நடந்து வருகிறது. பொதுமக்களுக்கு நிறைய பாதுகாப்பும் பலனும் இருப்பதால் ஸ்ரீ ப்ளூ மெட்டல் அமைவதால் எந்த ஒரு ஆட்சேபணையும் இல்லை என்று நான் உறுதியாக சொல்கிறேன்.

நன்றி, வணக்கம்.

9. <u>திருமதி. ஜெப கனி, தன்னார்வலர், கோயம்புத்தூர் மாவட்டம்</u>

என் பெயர் ஜெபகனி. நான் கோயம்புத்தூர் மாவட்டத்திலிருந்து வருகிறேன். சுற்றுசூழல் சமூக ஆர்வலராக பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். இதற்கும் முன்னால் பேசிய அனைவரின் கருத்துக்களையும்உள்வாங்கினேன்.

உண்மையிலே எத்தனையோ குவாரி மீட்டிங் போய் கொண்டிருக்கிறேன். இவ்வளவு பெரிய கருத்துக்களை இவ்வளவு பேர் வந்து சொல்லும்போது, 20 ஆண்டுகளாக இந்த நிறுவனம்

பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதில் உண்மையிலேயே சந்தோஷமான விஷயமாக இருக்கிறது.

அதனால் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தக்கூடிய இந்த கல் குவாரி இன்னும் மக்களுக்கு நிறைய விஷயங்களை அருமையாக செய்யும். படிப்பு வசதி, ஏழை பெண்களுக்கு திருமண வசதி போன்றவற்றை செய்தார்கள் என்றால், இந்த நிறுவனம் இன்னும் சிறப்பாக இருக்கும்.

வேப்பம் மரம், பூவரச மரம், புங்க மரம் போன்ற மரங்களை நடத்து வளர்க்கும்போது, அந்த பகுதியில் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும்.

இன்னும் அந்த இடங்களை பாதுகாக்கவேண்டும் என்றுகேட்டுக்கொண்ட இந்த நிறுவனம் மேலும்மேலும் வளர்ந்து மக்களுக்கு நிறைய நன்மைகளை செய்யவேண்டும், செய்வார்கள் என கேட்டுக்கொண்டுவிடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம். தடையில்லாத சான்று அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

10. <u>திருமதி. ரேவதி, சிக்காரம்பாளையம், வார்டு உறுப்பினர்</u>

என் பெயர் ரேவதி. நான் சிக்காரம்பாளையத்திலிருந்து வருகிறேன். நான் முன்னாள் வார்டு உறுப்பினராக இருந்திருக்கிறேன்.

கனிமம் மற்றும் சுரங்கத்திலிருந்து வரும் நிதியிலிருந்து நம்ம பஞ்சாயத்திற்கு தேவையான அனைத்து சாலை வசதிகள், கழிவுநீர் வடிகால் வசதிகள், அதுமட்டுமல்லாமல் நமக்கு நாமே திட்டத்தின் மூலம் நிறைய பணிகளை செய்துவந்துள்ளார்.

நம் தலைவருக்கு இந்த கல் குவாரி அமைக்க ஆவணச் செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

11. <u>திருமதி. பாப்பாத்தி, கண்ணார்பாளையம், கோவை மாவட்டம்</u>

என் பெயர் பாப்பாத்தி. கண்ணார்பாளையம். எங்கள்பகுதியில் கல் குவாரியில் 100 பேருக்கு வேலை செய்யப்படுகிறது. எங்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை என்ற நிலை இல்லை, அதாவது

எவ்வொருவருக்கும் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கவில்லை. இந்த பகுதியில் M சேண்டு, ஜல்லி, கல் முழுவதிற்கும் தலைவர் உதவி செய்கிறார். நன்றி.

12. <u>திருமதி. பத்ரி</u> :

என் பெயர் பத்ரி. எனக்கு தலைவர் எல்லா நல்லதும் பண்ணியிருக்கிறார். கல்குவாரி இருப்பதினால் தான் எனக்கு நிறைய நல்லது கிடைத்திருக்கிறது. நான் உடல்நலம் சரியில்லாமல் இருந்துபோது இவர்தான் உதவி செய்தார். அவர் நன்றாக இருக்க வேண்டும். கல்குவாரி இருப்பதால் தான் எங்களுக்கு நல்லது.

13. <u>திரு. சாமிநாதன், ஒன்றிய குழு உறுப்பினர்</u>

வணக்கம், என் பெயர் சாமிநாதன். முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர். தலைவர் பற்றி அனைவரும் சொல்லிவிட்டார்கள். நான் ஒன்றும் புதிதாக சொல்ல முடியாது.

அந்த கரு வளர்ந்து, படிக்க வைத்து, வேலைக்கு அனுப்பி, இறப்பு வரை, இறப்பில் இறுதி சடங்கு வரை பிறப்பு முதல் இறப்புவரை, தலைவர் அந்த வண்டி வாகனத்தை அன்போடு அனுப்பி வைக்கிறார். அதனால் குவாரிக்கு அனுமதி வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

14. <u>திரு. K. ராமசாமி, சென்னிபுரம்பாளையம்</u> :

எல்லோருக்கும் மதிய வணக்கங்கள். என்னுடைய பெயர் K. ராமசாமி. சென்னை புறம் பாளையம் சிக்கரம் பாளையம் ஊராட்சியில் பணிபுரிந்துகொண்டிருக்கிறேன். 5 வருட காலமாக ஊராட்சி துணை தலைவராக பணியிலிருந்துகொண்டிருக்கிறேன். அன்றுமுதலிருந்து இந்த வரையும்எங்களுக்குளந்த ஒரு பாதிப்பும் கல்குவாரியினால் யாருக்குமில்லை. எங்களைப் போன்ற ஏழை பொதுமக்கள் 300 குடும்பங்கள் அவரை நம்பித்தான் பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள்; அவரை விட்டால் வேறு யாரும் இல்லை. அதே போல் எங்களைப் போன்ற பொதுமக்களுக்குநிதி செய்வதில் வல்லவர். சும்மா சொல்லக்கூடாது ஏனென்றால் அவர் வெளியூர் சென்ற காலத்திலும் ஊரில் ஏற்படும் துக்க காரியத்திற்குப் உடனே எழுத்தரிடம் சொல்லுவார். அவர் நம்மிடம் குறை என்ன உங்களுக்கு செலவு என்ன என்று கேட்டு உடனே அதை செய்து கொடுப்பார். அவர் ஊரில் இருந்தாலும், வெளியூர் சென்றாலும் அந்த பணி நிற்காது.

தற்போது குளிர்காலம் என்பதால் வயதான முதியவர்கள் 500 பேருக்குச் ஸ்வெட்டர் வாங்கி கொடுத்துள்ளார். சிறியவர் முதல் பெரியவர் வரை 500 ஸ்வட்டர் வாங்கி கொடுத்துள்ளார். படிக்காத ஏழை பொதுமக்களிடம் உங்களுக்கு என்ன பிரச்சனை என்று கேட்டு ஏழை பொதுமக்களின் குழந்தைகளின் கல்விக்குத் உத்திரவாதம் கொடுப்பவர்; அப்படிப்பட்ட நல்ல மனிதர். அந்த கிரஷரில் எந்த பாதிப்பும் இல்லை. அவர்கள் அந்த பணியை மீண்டும் தொடரவேண்டுமென்பது தான் எங்களுடைய கோரிக்கை; தவிர அவர் மீதோ, கிரஷர் மீதோ பொதுமக்கள் யாருக்கும் எந்த இடையூறும் இல்லை. தாராளமாக இந்த பணி தொடரவேண்டும். அவர்களை நம்பித்தான் நாங்கள் எல்லாம் செய்துகொண்டு வருகிறோம். அதனால் அவருக்குஉரிய மரியாதையை பொதுமக்களாகிய நாங்கள் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். அவரும் ஜாதி வேறுபாடின்றி இருந்திருப்பார்.

ஞானசேகரன் என்றாலே, சிறிய குழந்தை முதல் பெரியவர்வரை அனைவருக்கும் தெரியும்; யாரும் தெரியாதவர்கள் இல்லை. ரஜினிகாந்த் மாதிரி, அப்பேற்பட்ட நல்ல உள்ளம் படைத்த எங்களுக்கு அவர் நன்றாக இருக்க வேண்டும். பல சேவைகள் செய்ய வேண்டும். அந்த கல்குவாரி மீண்டும் தொடரவேண்டும் என்பதைக் கேட்டுக்கொண்டு விடைபெருகிறேன். நன்றி, வணக்கம்.

15. திரு. அருண்குமார் :

வணக்கம், என் பெயர் அருண்குமார். கடந்த 30 ஆண்டுகளாக நான் இங்கு இருக்கிறேன். நாங்கள் பிறப்பதற்கும் முன்பிருந்தே இந்த கல்குவாரி உள்ளது. இங்கே டிரைவர்களுக்கு எல்லாம் நல்ல வேலை வாய்ப்பு உள்ளது; அதுபோல் சுற்றிலும் 10,000 மரங்கள் நட்டிருக்கிறார்கள். இன்னும் நடுவார்கள், புழுதி பறக்காமலிருக்க, தண்ணீர் வண்டி வைத்து தண்ணீர் தெளிக்கிறார்கள். அதனால் தூசி பறப்பது இல்லை. 20 ஆண்டுகளுக்கு மேலாக குழந்தைகளுக்குச் சீருடை, காலணி கொடுத்து, இங்கிலீஷ் மீடியத்திற்கு சமமாக செய்துகொண்டிருக்கிறார். இது பெரிய நல்ல விஷயமாக உள்ளது.

10ம் வகுப்பு படிக்கும் மாணவர்களை இலவசமாக ஒரு நாள் கல்வி சுற்றுலாவிற்கு விமானத்தில் இரண்டு ஆண்டுகளாக கூட்டிசெல்கிறார். அதனால் படிப்பதற்குத் தூண்டுகோலாக உள்ளது. அதனால் இந்த கல்குவாரி வருவதினால் எனக்கு எந்தப் பிரச்னையும்

இல்லை. அதனால் தைரியமாக கல்குவாரிக்கு அனுமதி கொடுக்கவேண்டும் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

<u>ஞானசேகரன் திட்ட உரிமையாளர்</u>:

அனைவருக்கும் வணக்கம். கடந்த 25 ஆண்டுகளாக இந்த தொழிலை தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கிறேன். பெள்ளாதி, சிக்காரம் பாளையம் பகுதியில், நமது கல்குழி அமைகிற குறிப்பிட்ட ஒரு பகுதி மட்டுமே கல் எடுக்க முடியும்; கல்எல்லா இடத்திலும் எடுக்க முடியாத அந்த பகுதிக்கே கல்குழி பகுதி என்றுதான் பெயர் உள்ளது. அந்த பகுதியில் நான் மட்டுமில்ல, நிறைய பேர் கல்லுக்குழி நடத்திக்கொண்டு வருகிறார்கள். முன்பெல்லாம் வேட்டு வைத்தால் சத்தம் அதிர்வு எல்லாம் இருக்கும். இப்போதெல்லாம் புதுத் தொழில்நுட்பம் வந்துவிட்டது. ஏதாவது அதிர்வு இருக்கிறதா? அதிர்வு இல்லை. சின்ன ஊசி பட்டாசு வெடிப்பது மாதிரி வெடித்துவிடுகிறது.

அதே போல வாட்டர் கன், தூசி பறக்காமலிருப்பதற்குச் ஸ்பிரே இதெல்லாம் இப்பொழுது பயன்படுத்துகிறோம். அதை எல்லோரும் பார்ப்பதற்கு அனுமதிக்கிறோம். யாரையும் அனுமதிக்காமல் இல்லை. நமது கிரஷர் சுற்றி மட்டுமன்றி எங்கெல்லாம் இடம் இருக்கிறதோ அங்கெல்லாம் மரம் வளர்க்கிறோம். குறிப்பாக சிக்காரம்பாளையம் பஞ்சாயத்தை பசுமை பஞ்சாயத்தாக மாற்ற இங்கிருக்கும் அனைவரின் முயற்சியிலும் செய்துள்ளோம். அரசு என்னென்ன விதிமுறைகளை அமல்படுத்துகிறதோ அந்த விதிமுறைகளை அனுசரித்துச் செய்கிறோம். அதுபோல், திட்ட விளக்க உரையிலே சொன்னதுபோல் 10 ஆண்டு காலம் அந்த கல்குழி நடத்தினால் 24 கோடி 50 லட்சம் ரூபாய் ஊராட்சிக்கு வருமானம் வரும் என்று சொன்னார்கள். இதைக் கவனித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

அதனால் ஊராட்சியினுடைய வருமானங்கள் பெருகுவதற்கும், ஊராட்சியிலிருக்கும் மக்களுக்குத் அன்றாட வேலைகளை கொடுப்பதற்கும், ஊராட்சியிலிருக்கும் சுகாதாரப் பணிகள், கல்வி பணிகள், மக்கள் பணிகள் செய்ய இதே எல்லாமே பயன்படும். நான்மட்டும் சம்பாதித்தால் போதாது; நம் மக்களுக்குப் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்ற அடிப்படையிலே நமது கல்குழி நான் மட்டும் இல்லாமல், அனைத்து கல்குழி காரர்களும் இணைந்து செயல்பட்டதால் எல்லோருக்கும் நல்ல ஆதரவு கொடுத்ததற்கும் உண்மையிலேயே நன்றி. அதிகாரிகளுக்கும் மிக நன்றி. யாருக்குமே ஒளிவுமறைவும் இருந்திருக்காதது தான் இதனுடைய வெற்றிக்குக்

காரணம். எல்லோரும் பார்க்கிறார்கள், மரம் நட்டிருக்கிறோம், தண்ணீர் விடுகிறோம்; சுற்றுசூழலுக்கு எந்த பாதிப்பும் இல்லை. அதுபோல் அந்த பகுதியில் வீடுகளுமில்லை. தோட்டம் இருக்கிறதே தவிர வீடு இல்லை. அதனால் யாருக்கும் எந்த தொந்தரவு இல்லை. தொந்தரவு இல்லாமல் நாங்கள் தொழில் செய்துகொண்டிருக்கிறோம். அதை தொடர்ந்து நடத்துவதற்கும் நீங்கள் அனுமதி வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். எல்லோருமே வந்து நடத்தி கொடுத்ததற்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

16. <u>திருமதி. அம்சா, படியனூர்</u>:

என்னுடைய பெயர் அம்சா, படியனூர். ஸ்ரீ ப்ளூ மெட்டல் பார்தால் பள்ளி குழந்தைகளுக்கு இப்போது வரை வருடா வருடம் உடை, காலணிகள் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சிக்காரம் பாளையம் கிராமமில்லாமல் இன்னும் நிறைய கிராமங்களுக்கு கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுபோல் ஸ்ரீ ப்ளூ மெட்டலில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு, இல்லாமல் மற்ற பள்ளியில் படிக்கும் 10ம் வகுப்பு மாணவர்களுக்கு சிற்றுண்டி கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுபோல் கர்ப்பிணி பெண்களுக்கு குழந்தை பிறந்த ஒருவருடத்திற்கு ஊட்டச்சத்து பொருட்களை கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சமீபமாக குளிர்காலத்தில் ஸ்வெட்டர் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அதுபோல் கிரஷரை சுற்றி நிறைய மரக்கன்றுகள் நட்டிருக்கிறார்கள். சிக்காரம் பாளையம் பஞ்சாயத்திற்கும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் இந்த கிரஷர் வருவதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை.

17. <u>திருமதி. காளியம்மாள், சிக்காரம்பாளையம்</u> :

சிக்காரம் பாளையம் கிராமம், கண்ணர் பாளையம் காளியம்மாள் பேசுகிறேன். கல்குவாரியினால் எந்த பிரச்சனையும் இல்லை; ஏழை மக்களுக்கு மண் இலவசமாக தருகிறார்கள், வேலை வாய்ப்பும் நிறைய இருக்கிறது.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:**

உங்களுடைய கருத்துக்களை பதிவுசெய்வதற்குப் பொதுமக்கள் வேறு யாராவது இருக்கிறீர்களா? எழுத்துப்பூர்வமாக கொடுப்பதாக இருந்தாலும் கொடுங்கள்.

பேசவேண்டியவர்கள் யாராவது இருக்கிறீர்களா? என கேட்டு உறுதி செய்து கொண்டார். இக்கூட்டத்தில் பங்குகொண்ட பொதுமக்கள் அனைவருக்கும், சுற்றுச்சூழல் ஆர்வலர் மற்றும் திரு S. ஞானசேகரன், முன்னாள் சேர்மேன், சிக்காரம் பாளையம் பஞ்சாயத்து, இந்த குவாரி உரிமையாளர் அனைவருக்கும் நன்றி தெரிவித்து பேசினார்.

நிறைவாக, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், கூட்டத்தில் கலந்துகொண்டதற்கும், நன்றியினை தெரிவித்தபின், இக்கூட்டத்தின் கருத்துக்கள், பதிவுருக்கள் அனைத்தும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கே நாங்கள் அனுப்பிவைக்கிறோம். நீங்கள் கொடுத்த புகார், கூட்ட நடவடிக்கைகளின் ஒலி, ஒளி பதிவுகள் அனைத்தும் பதிவுசெய்யப்பட்டு, சென்னையில் உள்ள மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பிவைக்கப்படுமென்று தெரிவித்தார்.

இணைப்பு :

1. பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் பதிவு செய்யப்பட்ட குறுந்தகடு (CD) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
2. திட்டம் குறித்து பொதுமக்களிடமிருந்து எழுத்து மூலமாக பெறப்பட்ட கடிதங்கள் – 74 எண்ணிக்கை
3. பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்ட நபர்களின் வருகைப் பதிவேடு

5/3/26

மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
கோயமுத்தூர் வடக்கு

5.3.26

முதுநிலை மண்டல மேலாளர்/
மாவட்ட வருவாய் அலுவலர்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்
கோயமுத்தூர்